**மெததும்பர பிரதேச சபை - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மெததும்பர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தெல்தெனிய மத்திய நூலகத்தை மேம்படுத்தலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 500,000 பெறுமதி மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கிவல்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 448,479 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் பிரதேச அபிவிருத்தி வங்கியில் உள்ள நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 28,400,510 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் பிரகாரம் ஆண்டிற்குரிய வட்டியுடன் பெறுமதி ரூபா 33,818,178 ஆக இருந்தமையால் ரூபா 5,417,668 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 04 கணக்கு விடயங்களுககுரிய ரூபா 100,192,671 ஆன பதிவேடுகள், அட்டவணைகள மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 23(அ) ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள 1533/16 மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் வழங்கப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி பத்திரம் | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது கிடைத்த 05 விண்ணப்பங்களுக்காக குழு பரிந்துரை கிடைத்து 01 மாதம் முதல் 04 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்திருந்த போதும் அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 அனுமதிப்பத்திரங்களை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில்அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,594,073 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,989,546 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 36 சதவீதத்தினால் அதிகாரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,245,937 ஆன நிலுவை மீதியில் ரூபா 783,361 தொகையும் ரூபா 1,474,067 ஆன ஆண்டின் பட்டியலிடலில் இருந்து ரூபா 564,106 தொகையுமாக மொத்தம் ரூபா 1,119,815 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **கடை வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 122,322 ஆன நிலுவை மீதியில் மீளாய்வாண்டில் ரூபா பட்டியலிட்ட ரூபா 41,025 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 93,982 ஆன மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது. அம்மீதியில் ஓராண்டினை மிகைத்த ரூபா 81,297 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 410 நிறுவனங் களிலிருந்து நிலுவையான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 283,800 தொகை கைத்தொழல் வரி ரூபா 64,250 மற்றும் வியாபார வரி ரூபா 56,400 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) **ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,884,715 ஆன நிலுவைமோட்டார் வாகன வருமானத்தில் ரூபா 1,631,995 தொகையும் மீளாய்வாண்டில் பட்டியலிட்ட ரூபா 742,545 தொகையில் ரூபா 418,040 தொகையுமாக மொத்தம் ரூபா 2,050,035 அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 874,247 ஆன நிலுவை நீர்க் கட்டண மீதியில் ரூபா 337,965 தொகையும் மீளாய்வாண்டில் பட்டியலிட்ட 3,365,311 வருமானத்தில் ரூபா 1,089,751 என மொத்தம் ரூபா 1,427,716 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தெல்தெனிய பேருந்து நிறுத்து மிடத்தில் கடை ஒன்றை தெல்தெனிய டிபோவின் சாரதிகள் மற்றும் நடாத்துனர்களின் ஓய்வு பெறும் அறையாக 2017 திசெம்பர் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டின் போது ரூபா 501,500 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 501,500 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிந்த போதும் அக்கடைகளை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | உரிய அங்கீகாரமின்றி சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வேறு தரப்பினருக்கு வழங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) தெல்தெனியா நகரில் நிர்மாணிப்பதற்கு உத்தேச பொது கடைத் தொகுதியில் 170 புதிய கடைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு 93 குத்தகையாளர்களடமிருந்து ஒரே | தடையுத்தரவு கட்டளை காணப்படுவதால் நிர்மாண வேலைகளை | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ச்டங்கள், |

| | | | |
|---|---|---|---|
| | தடவையில் அறவிடும் பணமாக ரூபா 27,600,000 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கடைகளை வேறாக்குதல் சிக்கலினால் 22 குத்தகையாளர்கள் சபைக்கு எதிராக வழங்கு தொடர்ந்தமை காரணமாக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 435,000 தொகை சட்டத்தரணிகள் கட்டணமாக செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரே தடவையில் பணத்தொகையில் ரூபா 1,260,000 ஐ 13 குத்தகையாளர்களுக்கு மீண்டும் செலுத்த நேர்ந்திருந்தது. | விரைவுபடுத்த முடியாதுள்ளது. | விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று 1 இற்கு 05 இற்கும் இடைப்பட் காலமொன்றை மிகைத்திருந்த ரூபா 115,161,590 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யபபடாத ரூபா 5,358,465 தொகையும் உள்ளடக்கி மொத்தம் ரூபா 120,520,055 ஆன நிர்மாணக் கடன்பட்டோர் மற்றும் 2 நானாவித கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று 1 – 5 இற்கும் இடைப் பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாத ரூபா 92,592,419 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த ரூபா 3,233,059 தொகையும் உள்ளடக்கி மொத்தம் ரூபா 95,825,472 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் களஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியின் 16 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |